தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6

ந.க. எண் 005527 / இ / இ2 / 2025 நாள் 11.06.2025

பொருள்- பள்ளிக்கல்வி – இலவச பேருந்து பயண அட்டை அரசு / அரசு உதவிபெறும் பள்ளிகளில் – 2025 – 26ம் கல்வியாண்டில் 1 முதல் 12ம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவிகளுக்கு இலவச பேருந்து பயண அட்டை வழங்குவது - சார்ந்து

பார்வை- 1. அரசு துணைச் செயலாளர் பள்ளிக்கல்வித் துறை தலைமைச் செயலகம் கடித எண் 1843 / SE5(2) / 2014 நாள் 25.01.2025

2. பல்லவன் போக்குவரத்துக் கழக கடித எண் PTCS / 3 / 2025 General –1 நாள் 08.05.2025

----------------

பார்வையில் காணும் கடிதங்களின்படி பள்ளிக்கல்வி இயக்கக கட்டுப்பாட்டின் கீழ் வரும் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவிகளுக்கு இலவச பேருந்து பயண அட்டை வழங்கும் பொருட்டு EMIS தொழில்நுட்ப குழுவால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணியினை விரைந்து முடிக்கும் பொருட்டு EMIS App இல் உள்ள மாணவர்கள் விவரங்கள் அனைத்தும் சரியானவை என சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களால் சரிபார்க்கப்பட்ட பின்னரே மாணாக்கர்களுக்கு பேருந்து பயண அட்டை வழங்க இயலும் என்பதால் தலைமையாசிரியர்கள் மாணவ / மாணவிகள் தற்போது பயிலும் வகுப்பு, மாணாக்கர்களின் விவரங்கள் மற்றும் மாணாக்கர்களின் புகைப்படத்தினை உள்ளீடு செய்யுமாறும் அனைத்து தலைமையாசிரியர்களுக்கும் அறிவுறுத்துமாறு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் மாணவ / மாணவியர்களின் விவரங்களை சரிபார்த்து இலவச பேருந்து பயண அட்டை வழங்குமாறும், வழங்கிய விவரம் வகுப்பு வாரியாக இவ்வியக்கத்திற்கு உடன் அனுப்பி வைக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக்கல்வி இயக்குநர்

பெறுநர்- அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

12/6/25

Padasalai.Net